# 10

# உப்பு மற்றும் வெளிச்சம்

## (5:13–16)

*இயேசு தொடர்ந்து பிரசங்கிக்கையில், தமது சீஷர்களை "உப்பாக" மற்றும் "வெளிச்சமாக" இருக்கும்படி கட்டளையிட்டார். அவர்கள் தங்களைச் சுற்றிலும் உள்ள உலகின்மீது மிகவும் செயல் தாக்கம் ஏற்படுத்தும் வகையில் வாழ வேண்டும் என்று அவர் விரும்பினார். இராஜ்யத்தின் அரசரைப் போலவே நடப்பதன் மூலம் அவர்கள், இராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரதிபலிக்க வேண்டும் என்று அவர் அறைகூவல் விடுத்தார்.*

## *பூமிக்கு உப்பு (5:13)*

***13 நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.***

***வசனம் 13.*** *இயேசு, **"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்"** என்று கூறினார். பழங்காலத்தில் இருந்தவர்கள், உணவிற்கு ருசியூட்டுதல் என்பதற்கும் மிக அதிகமான பிற வகைகளில் உப்பைப் பயன்படுத்தினர் (யோபு 6:6; கொலோசெயர் 4:6). இயேசுவின் உரையைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள், அழியக்கூடிய உணவுகளைச் சேமித்து வைப்பதற்கு, குளிர்பதனப் பெட்டிகளையோ அல்லது பிற நவீன முறைகளையோ கொண்டிருந்ததில்லை என்பதால், அவர்கள் அவற்றைப் பாதுகாக்கும்பொருளாக உப்பைப் பயன்படுத்தினர். உதாரணமாக, கலிலேயாக் கடலில் இருந்து மீன்கள் பிடிக்கப்பட்டபின்னர், அவைகள் உப்பிடப்பட்டு விற்பனைக்காகப் பிற இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். எண்ணற்ற மருத்துவரீதியான நோக்கங்களுக்கும் உப்பு பயன்படுத்தப்பட்டது. மூத்த பிளீனி என்பவர், மருந்தியலில் உப்பு ஒரு சுத்திகரிக்கும் பொருளாகப் பயன்படுத்தப்பட்டது என்று கூறினார். இது பாம்புக்கடி மற்றும் குளவிகொட்டுதல் ஆகியவற்றிற்குச் சிகிச்சை அளிப்பது தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டது. கண்ணுக்கு இடும் கலிக்கம் என்ற மையில் இது ஒரு துணைப்பொருளாக இருந்தது மற்றும் காயங்களை மூடிக்கட்டவும் பயன்படுத்தப்பட்டது. பற்சிதைவைத் தடுப்பதற்கும் வயிற்றில் இருந்து புழுக்களை வெளியேற்றுவதற்கும் உப்பு பயன்நிறைந்ததாக இருந்தது.[1]*

*உப்பு ஒரு தெய்வீகப் பண்புகொண்டிருந்தது என்று அதைப்பற்றி கிரேக்கர்கள் நம்பினர், மற்றும் ரோமர்கள் தங்கள் போர்வீரர்களுக்கு அதையே பெரும்பாலும் ஊதியமாகக் கொடுத்தனர். உண்மையில் இது, "அவன் தனது உப்பிற்குத் தகுதியானவன்" என்ற சொல்விளக்கம் எழச்செய்தது. உப்பு "மனித வாழ்வின் அடிப்படையான அத்தியாவசியங்களில்" ஒன்றாக*

இருப்பதாகக் கருதப்பட்டது.[2] உப்பின் பயனைப் பற்றிப் புகழ்ந்துரைத்தபின் பிளீனி என்பவர், "முழு உடலுக்கும் உப்பு மற்றும் சூரியன் ஆகியவற்றைக் காட்டிலும் அதிகம் பயன்நிறைந்தது வேறு எதுவும் இல்லை என்று கூறுவது விசேஷமாக நடைமுறைப்படுத்தக்கூடியதாக இங்குள்ளது என்று எழுதினார்."[3] மிகவும் அதிகமான உப்பு நமது ஆரோக்கியத்தை அழித்துவிடக்கூடும் என்றிருக்கையில், குறிப்பிட்ட அளவு உப்பானது நமது உடல் நீர்மங்களை சமானமாகப் பராமரிப்பதில் பயன் நிறைந்ததாக இருக்கிறது.

இயேசுவின் சீஷர்கள் உலகத்தில் ஆற்றல்நிறைந்த செல்வாக்கு உடையவர்களாக இருக்கும்படி அவர்களை ஏவுவதற்கு அவர், உப்பை - அதன் ருசிகொடுக்கும் தன்மை, பாதுகாக்கும் தன்மை மற்றும் குணப்படுத்தும் ஆற்றல் ஆகியவற்றுடன் - ஒரு ஒப்புமையாகப் பயன்படுத்தினார். லியோன் மோரீஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> பாதுகாக்கும் பொருள், சிதைவின் விரோதி மற்றும் உணவிற்கு ருசிகொடுக்கும் பொருள் என்ற வகையில் உப்பின் பணிகளைப் பற்றி இயேசு நினைத்தார் என்பது உறுதி. அவரைப் பின்பற்றுபவர்கள், சமூகத்தில் நன்மையானவற்றைப் பாதுகாக்கவேண்டும். மோசம் போக்குபவற்றை அவர்கள் எதிர்த்து நிற்க வேண்டும்; அவர்கள் நன்மைக்காக சமூகத்தை ஊடுருவி ஒழுக்கரீதியாக நோய் எதிர்ப்புப் பொருளாகச் செயல்படுகின்றனர். மற்றும் அவர்கள் உப்பு ஒரு உணவு வகைக்குத் தருவது போன்ற ஒரு இனிய சுவையை வாழ்விற்குத் தருகின்றனர்.[4]

உப்பு பழங்கால விவசாய உரமாகவும் பயன்படுத்தப்பட்டது (லூக்கா 14:34, 35). ஒரு விளை நிலத்தில் மிக அதிகமான உப்பு, அதை அழித்துவிடும் (உபாகமம் 29:23; நியாயாதிபதிகள் 9:45), ஆனால் குறைவான அளவில் உப்பு என்பது, விதையின் வளர்ச்சியை ஊக்குவித்து, அது ஒரு நல்ல விளைவை உற்பத்தி செய்வதில் உதவியாக இருக்கும். அவ்வாறே, இயேசுவின் சீஷர்களுடைய தூய்மையான செல்வாக்கு, இராஜ்யத்தின் நற்செய்தி, தனது முழுமையான செயல்விளைவைக் கொண்டிருக்க உதவுவதில் ஒரு உரமாகச் செயல்படுகிறது.

மேலும் இயேசு, **"உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்?"** என்றும் கூடுதலாகக் கூறினார். இரசாயனரீதியாக, உப்பு என்பது சோடியம் குளோரைடு என்பதாக உள்ளது, மற்றும் அதனால் உப்பு தனது உப்புத்தன்மையை இழக்க இயலாது. இருப்பினும் இயேசுவின் நாட்களில் பெரும்பான்மையான உப்பு, கடலில் இருந்து உப்புத்தண்ணீரை ஆவியாக்குதலில் இருந்தே தயாரிக்கப்பட்டது. சவக்கடலில் இருந்து வரும் உப்பானது. தனது உப்புத்தன்மையுடன், பல இரசாயனப் பொருட்களையும் தாதுக்களையும் கொண்டிருந்தது. உப்பு அறுவடை செய்பவர்கள், தங்களால் இயன்ற அளவுக்கு நல்ல உப்பைக் கடலில் இருந்து பெறுவார்கள்; மற்றும் இது குவித்து வைக்கப்பட்டு, பயன்பாட்டிற்காகக் காத்திருக்கும். மழை பெய்தது என்றால், உப்பு வெளியே திரவமாகக் கசிந்து, கடினமான, பயனற்ற பொருளை விட்டுச் செல்லும். இது **வெளியே கொட்டப்படுவதற்கும் மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய** வேறொன்றுக்கும் உதவாது. இதே அடையாளத்தைக் கொண்டு, ஒரு கிறிஸ்தவர் தமது இரட்சிக்கும் செல்வாக்கை இழக்கின்றபோது, அவர் கிறிஸ்துவின் ஊழியத்திற்குப் பயனற்றவர் ஆகிறார்.

## உலகத்திற்கு வெளிச்சம் (5:14-16)

***[14]நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. [15]விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல்வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். [16]இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.***

*வசனம் 14*. தொடர்ந்து இயேசு, **"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்"** என்றார். வேதவசனங்களில் "வெளிச்சம்" என்பது அடிக்கடி, சத்தியம், தூய்மை மற்றும் நீதி ஆகியவற்றின் அடையாளமாக உள்ளது. இதற்கு நேர்மாறாக, "இருள்" என்பது அறியாமை மற்றும் பொல்லாங்கின் அடையாளமாக உள்ளது (சங்கீதம் 119:105; யோவான் 1:4-9; 3:19-21; 2 பேதுரு 1:19; 1 யோவான் 1:5-7). பழைய ஏற்பாட்டு யுகத்தில், புறஜாதி மக்களினங்களுக்கு இஸ்ரவேல் மக்கள் ஒரு வெளிச்சமாக இருக்க வேண்டும் என்று தேவன் கேட்டுக்கொண்டார் (ஏசாயா 42:6; 49:6), ஆனால் இந்த ஊழியத்தில் அவர்கள் அடிக்கடி தவறிப்போயினர். இயேசு தேர்ந்துகொண்ட ஊழியம் என்ற பணிப்பொறுப்பு அவரது பின்பற்றாளர்களுக்கும் கடத்தப்பட்டது.[5] அவர், "உலத்திற்கு வெளிச்சமாக" இருந்தார் (யோவான் 8:12; 9:5), மற்றும் தமது பின்பற்றாளர்களும் "உலகத்திற்கு வெளிச்சமாக" இருப்பதாக அவர் கூறினார் (காண்க பிலிப்பியர் 2:15). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவரது ஊழியக்காரர்கள் அவரிடம் இருந்து தாங்கள் பெற்றுக்கொண்ட வெளிச்சத்தைப் பிரதிபலிக்க வேண்டும் (எபேசியர் 5:6-14). உலகத்தை விழுங்கும் ஆவிக்குரிய இருளில் இருந்து வெளியே அதை அழைத்து வழிநடத்துவதற்கு, உலகத்திற்குச் சத்தியத்தின் வெளிச்சம் தேவைப்படுகிறது.

வெளிச்சம் பற்றிய இயேசுவின் ஒப்புவமையை அவர், **"மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது"** என்று கூறி விவரித்தார். சாத்தியப்பட்டபோது, நகரங்கள் பல்வேறு காரணங்களுக்காக குன்றுப்பகுதிகளின் மீது கட்டப்பட்டன. இதுபோன்ற இட அமைப்பு நடைமுறைப் பயன்பாடு ஒன்றைக் கொண்டிருந்தது. கால்நடைகளை வளர்க்கவும் பயிர்களை வளர்க்கவும், சமதளமான நிலங்கள் தன்னைச் சுற்றி இருப்பதை இது அனுமதித்திருக்கும். இந்தவகையான இட அமைவு, வானிலையுடன் தொடர்புடையதாகவும் இருந்தது. உயர்ந்த இடங்களில் வசித்தல் என்பது, அதன் குடிமக்களுக்கு, வெப்பவேளையில் குளிர்ச்சியையும், புழுக்கம் நிறைந்த வெயில்கால இரவுகளில் கடல் காற்று நிலப்பகுதியில் வீசும்போது இதமான சூழ்நிலையையும் தரும். மலைப்பகுதி என்பது இராணுவரீதியாகவும் அனுகூலம் கொண்டிருந்தது. உயரமான பகுதி என்பது, விரோதிகளின் தாக்குதல்களுக்கு எதிராக மக்களைக் காத்துக்கொள்வதற்கு இயற்கையான காவல் கோபுரம் ஒன்றை அளிப்பதாக இருந்தது. மற்றும், மலைப்பகுதி நகரங்கள் தங்கள் அமைவுகளில், களைப்படைந்த இரவு வேளைப் பயணிகளுக்கு, பல மைல்

*தூரத்தில் இருந்தும் பார்க்கும்படியான வெளிச்சக் கதிர்களை வீசின.*

*இயேசு இந்தக் கூற்றை ஏற்படுத்தியபோது, ஒரு ஜனக்கூட்டம் அவரைச் சுற்றி, ஒரு "குன்று" அல்லது "மலை" மீது இருந்தது (5:1). இந்தப் பெருந்திரளான சீஷர்கள் "மலையின் மீதுள்ள நகரம்" போன்று இருக்க வேண்டும். இன்றைய நாட்களில்கூட கலிலேயாக் கடலுக்குச் செல்பவர்கள், சுற்றிலும் உள்ள மலைகளில் எத்தனை நகரங்கள் கட்டப்பட்டுள்ளன மற்றும் அவைகள் தங்கள் வெளிச்சத்தை கரையோரத்திற்கு இரவு வேளைகளில் எப்படி அனுப்புகின்றன என்பதைப் பார்த்து மனம் ஈர்க்கப்படுகின்றனர்.*

***வசனம் 15.*** *இயேசு, முழுநகரத்தின் வெளிச்சம் என்ற தமது பெரிய விவரிப்பில் இருந்து, ஒரு தனிவீட்டின் வெளிச்சம் என்ற விவரிப்பைத் தொடர்ந்தார்.* ***விளக்கைக் கொளுந்தி மரக்காலால்*** *மூடிவைப்பதைக் காணுதல் அரிதாயிருக்கும் என்று அவர் கூறினார் (காண்க லூக்கா 8:16; 11:33; மாற்கு 4:21). முதல் நூற்றாண்டில் இருந்த மக்கள், தங்கள் இல்லங்களில் வெளிச்சமூட்ட சிறு எண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்தினர். அப்படிப்பட்ட விளக்கின்மீது ஒரு மரக்காலைப் போட்டு வைத்தல் என்பது அந்த விளக்கின் நோக்கத்தைத் தோல்வியடையச் செய்து அதன் சுவாலையை அணைத்துவிடச் சாத்தியம் உள்ளது - இது இருளின்/அழிவின் அடையாளமாக உள்ளது (யோபு 18:5, 6; 21:17; நீதிமொழிகள் 13:9; 20:20; 24:20; 31:10, 18). அதற்குப் பதிலாக, விளக்கை ஒருவர்* ***விளக்குத்தண்டின்*** *மீது வைப்பார், இது சுவரில் இருந்து நீட்டிக்கொண்டிருக்கும் ஒரு கல்லாகவோ அல்லது மையத் தண்டுடன் பிணைக்கப்பட்ட ஒரு மர தடுக்காகவோ இருக்கும். இதன் விளைவாக, விளக்கானது* ***வீட்டில் உள்ள யாவருக்கும் தனது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்யும்.*** *இது சிறிதளவே வெளிச்சம் தரும் ஒரு சிறுவிளக்காக இருக்கலாம், ஆனால் இதை விளக்குத் தண்டின்மீது வைத்தல் என்பது, அதிக பட்சம் ஒளியைத் தருவதை அனுமதிக்கும். "யூத இல்லங்கள் பெரும்பாலும் எளிய ஒரு அறை கொண்ட அமைப்புகளாக இருந்தபடியால், இப்படி உயரத்தில் வைக்கப்பட்ட விளக்கமானது வீட்டில் இருந்த ஒவ்வொருவருக்கும் வெளிச்சம் தர முடிந்திருக்கும்."[6]*

***வசனம் 16.*** *கொள்கையை எடுத்துரைத்து (5:14அ) அந்தக் கொள்கையின் இரு விவரிப்புகளைக் கொடுத்து (5:14ஆ, 15) அதன் பின்பு, இயேசு இந்த சத்தியத்தைத் தமது சீஷர்களுக்கு நடைமுறைப்படுத்தினார். அவர்,* ***"இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது"*** *என்று கூறினார். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் தங்களை நோக்கியே கவனத்தை ஈர்க்கக்கூடாது; அதற்குப் பதிலாக அவர்கள், தங்களைச் சுற்றிலும் உள்ள உலகத்தாருக்கு, கிறிஸ்துவை ஈர்ப்பவராகக் காண்பிக்க வேண்டும். "நற்கிரியைகள்" என்பதில் உள்ள "நல்ல" என்பதற்கான கிரேக்க வார்த்தை, "அழகு நிறைந்த," "பயன்நிறைந்த" மற்றும் "புகழ்ச்சிக்குத் தகுதியான" வகையில் உள்ளவற்றை விவரிக்கப் பயன்படுத்தப்படுகிறது, "மகிமை" என்பதற்கான வார்த்தை, "உயர்த்துதல்," "மேன்மைப்படுத்துதல்" அல்லது "துதித்தல்" என்று அர்த்தப்படுகிறது. இந்த வார்த்தையில் இருந்துதான்* "doxology" *என்ற ஆங்கில வார்த்தை தரவழைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்களின் நற்செயல்கள், மற்றவர்களுக்குத் தேவனையும் அவரது குமாரனையும் சுட்டிக்காண்பிக்க வேண்டியவையாக உள்ளன, இவையாவும் கர்த்தருக்குத்*

*துதிசெலுத்துதலை விளைவிக்க வேண்டும் (காண்க எபேசியர் 2:10; 1 பேதுரு 2:12).* J. W. McGarvey *அவர்கள், "வெளிச்சமானது உலகத்தில் இருந்து இருளைத் துரத்தி, மனிதர்கள் எவ்வாறு பயணம் செல்வது மற்றும் எவ்வாறு உழைப்பது என்று காணக்கூடியவர்கள் ஆக்குவது போன்று, சீஷர்கள் தங்கள் நற்செயல்கள், தங்கள் போதனை மற்றும் தங்கள் உதாரணங்களினால், மனிதர் தங்கள் அறியாமையையும் முன்தப்பெண்ணத்தையும் அகற்றச் செய்து, அவர்கள் நித்திய ஜீவனுக்கான வழியைக் காணக்கூடியவர்கள் ஆக்க வேண்டும்" என்று விளக்கப்படுத்தினார்.*[7]

## ✧✧✧✧✧ பாடங்கள் ✧✧✧✧✧

## *உப்பு (5:13)*

*கிறிஸ்தவர்களாகிய நாம், "பூமிக்குரிய எவ்வகையான நற்தன்மையும் கொண்டிராத அளவுக்கு, இனிவரும் உலகத்தைச் சார்ந்தவர்களாக" இருக்கிறோம் என்று அடிக்கடி நம்மீது குற்றம் சாட்டப்படுகிறது. நமது பாதங்களின்கீழ் உள்ள பூமியைக் கண்ணோக்க இயலாதவர்கள் ஆகும் அளவுக்கு நாம் மேகங்களை நோக்கி உயரே நமது தலைகளை உயர்த்திக் கொண்டிருக்கச் சாத்தியம் உள்ளதா? நாம் இந்த உலகத்தில் வாழ்கிறோமா? அல்லது பரலோக இராஜ்யத்தின் குடிமகன்களாக வாழ்கிறோமா? இது அல்லது அது என்ற சூழ்நிலையாக இது இருப்பதில்லை.*

*இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னர் தமது ஜெபத்தில், தமது சீஷர்கள் "இந்த உலகத்தில்" இருந்தனர் ஆனால் அவர்கள் "இந்த உலகத்தார் அல்ல" என்று கூறினார் (யோவான் 17:11, 16). ஒரு கிறிஸ்தவர், கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதற்காக இந்த உலகத்தில் இருத்தல் என்பது ஒரு நல்ல விஷயமாக உள்ளது. கிறிஸ்தவருக்குள் உலகம் என்பது நல்ல விஷயமாக இருப்பதில்லை (யாக்கோபு 4:4; 1 யோவான் 2:15-17). இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் இந்த உலகத்தில் இருந்து எடுத்துப்போடப் படவேண்டும் என்று ஜெபிக்கவில்லை, ஆனால் அவர்கள் இந்த உலகத்தில் தங்களுக்குத் தேவன் நியமித்துள்ள நோக்கத்திற்காக ஊழியம் செய்கையில், சாத்தானிடம் இருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றே ஜெபித்தார் (யோவான் 17:15, 18). இந்த போதனையில் உரைக்கப்பட்டபடி, தேவபக்தியால் இந்த உலகத்திற்கு ருசியூட்டுதல் என்பதே அந்த நோக்கமாக உள்ளது.*

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், நம்மைச் சுற்றிலும் உள்ள எல்லா மக்களும் கிறிஸ்துவை ருசிக்கும்படி, உப்பு சேர்ப்பதில் உதவிசெய்பவர்களாக இருக்க வேண்டும். நாம் பசப்பு வார்த்தை பேசுபவர்களாக, மந்தமானவர்களாக, ஜீவனற்றவர்களாக, ஆவிக்குரிய ஆற்றல் இல்லாதவர்களாக இருக்கக்கூடாது. நாம் உள்ளே சென்று கலந்துவிட்டவர்களாக இராமல், வெளியே தனித்து நிற்பவர்களாக இருக்க வேண்டும். நாம் வேறுபட்டவர்களாக மாத்திரமல்ல, ஆனால் வேறுபாட்டை ஏற்படுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும். இயேசு நம்மை, சர்க்கரையாக இருக்கும்படியல்ல, ஆனால் உப்பாக இருக்கும்படியே அழைத்தார். உப்பு எரிச்சல் ஊட்டக்கூடும், ஆனால் அது பாதுகாப்பதாகவும் இருக்க முடியும். நமது "உப்புத்தன்மையை" நாம் இழந்துபோனால், கிறிஸ்துவின் நிமித்தம் எந்த நற்செயலும் செய்வதற்கு நாம் இனியும் தகுதியானவர்களாக*

இருப்பதில்லை.

## வெளிச்சம் (5:14-16)

தேவன் ''வானத்தையும் பூமியையும்'' படைத்தபின்பு, ''பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது,'' உயிருள்ள எல்லாவற்றிற்கும் அத்தியாவசியமாக உள்ள வெளிச்சத்தை அவர் படைத்தார் (ஆதியாகமம் 1:1-3). வெளிச்சம் என்பது இரட்சிப்புடன் நீண்ட காலமாகத் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. நமது ஜன்னல்களில் நாம், வழிகாட்டியாகவும் நம்பிக்கையின் அடையாளமாகவும் விளக்குகளைப் பொருத்தி வைக்கிறோம். கலங்கரை விளக்கங்கள் இன்னமும், ஆபத்தோடு தண்ணீரில் இருக்கும் கப்பல்களையும் அவைகள் தவிர்க்க வேண்டிய அபாயமான தடைகளையும் எச்சரிக்கின்றன. கிறிஸ்தவர்கள், சத்தியத்தின் வெளிச்சத்தை மற்றவர்களுக்கு வழிகாட்டும்படி, இந்த உலகத்தில் வெளிச்சங்களாக இருக்க வேண்டும். நமது வெளிச்சம் அணைத்து விட்டது என்றாலோ அல்லது அவற்றை நாம் மறைத்து வைத்தோம் என்றாலோ, பலர் இந்த உலகத்தின் இருளில் தடவிச்செல்லும்படி விடப்பட்டு அவர்கள் இழந்து போகப்படுவார்கள். தனித்தனி கிறிஸ்தவர்கள் ''உலகத்திற்கு வெளிச்சமாக'' இருக்கின்றனர் என்று இயேசு கூறுகையில், சபைக்குழுமங்கள், தாங்கள் அமைந்துள்ள சமூகம் ஒவ்வொன்றிலும் கலங்கரை விளக்கங்கள் போன்று இருக்கின்றன. மத்தேயு 5:14-16ல் தனிநபர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. சபைக்குழுமங்களுக்கும் அதே அளவு நடைமுறைப்படுகிறது.

## உலகத்திற்கு வெளிச்சம் (5:14-16)

நமது உலகம் ஆவிக்குரிய இருளினால் விழுங்கப்பட்டு இருக்கிறது. இருப்பினும், வெளிச்சம் இருளைத் துரத்துகிறது. எவரொருவரும் வெளிச்சத்தை இருளினால் அணைக்கக் கூடியவர்களாக எப்போதும் இருந்ததில்லை. வெளிச்சம் இயங்குகையில் இருள் ஓடுகிறது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், சத்தியத்தின் வெளிச்சத்திற்கு மக்களை வழிநடத்தும்படி நமது வெளிச்சங்களைப் பிரகாசிக்க அனுமதிப்பவர்களாக இருக்க வேண்டும். இது, ஒரு கழுத்துச் சங்கிலியில் ஒரு சிலுவையை அணிந்து கொள்ளுதலைக் காட்டிலும் அதிகமானவற்றை அர்த்தப்படுத்துகிறது. கிறிஸ்து நமக்குள் வாழ்வதை மற்றவர்கள் காணக்கூடும்படியான வழியில் நமது வாழ்வை நடத்தும்படி நம்மிடத்தில் இது கேட்டுக்கொள்கிறது (யோவான் 13:35; 15:8; 2 கொரிந்தியர் 8:21; பிலிப்பியர் 2:14-16; தீத்து 2:7, 8; 1 பேதுரு 2:12). மெக் ஆர்தர் அவர்கள், ''மற்றவர்கள் மனதைப் புண்படுத்திவிடுவோமோ என்ற அச்சத்தினால், அக்கறையற்ற தன்மையினால் மற்றும் அன்பற்ற பண்பினால் அல்லது வேறு எந்தக் காரணத்தினாலாவது, நமது வெளிச்சத்தை நாம் மறைத்து வைத்தால், நாம் கர்த்தருக்கு உண்மையற்ற தன்மையைச் செயல்விளக்கப் படுத்துகிறோம்'' என்று எழுதினார்.[8]

---

குறிப்புகள்

[1]Pliny *Natural History* 31.45. [2]Sirach 39:26 (NRSV). [3]Pliny *Natural History* 31.45. [4]Le-

on Morris, *The Gospel According to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 104. [5]Robert H. Mounce, *Matthew*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 42. [6]Micheal J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke*, ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 36. [7]J. W. McGarvey, *The New Testament Commentary*, vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 51. [8]MacArthur, 246.